ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1465/19 - 2006 ඔක්තෝබර් 05 වැනි බ්‍රහස්පතින්දා - 2006.10.05

*1465/19 ஆம் இலக்கம் – 2006 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 05 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) – பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

### *2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க முத்திரைத் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டம்*

3 ஆம் பிரிவின் கீழான கட்டளை

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் யாப்பின் 44(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, முத்திரைத் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3ஆம் பிரிவின் கீழ் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரங்களின்படி சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், இக்கட்டளைகளை ஆக்குகின்றேன் :*

(அ) இத்தால் குறிப்பிடப்படும் அட்டவணையின் நிரல் I இல் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள சாதனங்களின் மீது அந்த அட்டவணையின் II ஆவது நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள வீதங்களில் முத்திரைக் கட்டணங்களை 2006.10.06 ஆந் திகதியிலிருந்து அறவிடவேண்டுமென இத்தால் அறிவிக்கின்றேன்.

(ஆ) 2006, ஏப்பிறல் 3 ஆந் திகதிய 1439/1 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு 2006, ஏப்பிறல் 20 ஆந் திகதிய 1441/17 ஆம் இலக்க வர்த்தமானி கட்டளைமூலம் திருத்தப்பட்டவாறான கட்டளைகள் 2006.10.06 ஆந் திகதியிலிருந்து செயன்வலுப்பெறும் வகையில் நீக்கப்படுகின்றது.

மஹிந்த ராஜபக்ஷ,
சனாதிபதி.
(நிதி, திட்டமிடல் அமைச்சர்.)

நிதி, திட்டமிடல் அமைச்சு,
கொழும்பு 01,
2006, ஒற்றோபர் 5.

**அட்டவணை**

| விடய இல. | நிரல் I | நிரல் II<br>ரூபா ச. |
|---|---|---|
| 1. | ஏதேனும் சத்தியக் கடதாசியொன்று | 25.00 |
| 2. | ஏதேனும் காப்புறுதி பூட்கையொன்று; ஒவ்வொரு 1,000 ரூபா அல்லது பூட்கையின் தவணைக் கட்டணத்தின் மொத்தத் தொகையின் ஒவ்வொரு பகுதிக்கும் | 0.50 |

அட்டவணை

| விடயஇல. | நிரல் I | நிரல் II<br>ரூபா ச. |
|---|---|---|
| 3. | பகிரங்க நொத்தாரிசு ஒருவராகச் செயலாற்றுவதற்கான அனுமதிப்பத்திரமொன்று | 1,000.00 |
| 4. | ஏதேனும் வியாபாரத்தை அல்லது வர்த்தகத்தை, தொழிலை அல்லது வாழ்க்கைத் தொழிலைவழங்கப்பட்ட உரிமமொன்றில் குறிப்பிட்ட காலத்திற்குக் கொண்டு நடாத்துவதற்கான ஏதேனும் உரிமப்பத்திரம் | 1,000.00 ரூபா அல்லது உரிமப் பத்திரக் கட்டணத்தின் 10% இவ்விரண்டில் எது குறைவானதோ அத் தொகை |
| 5. | ஏதேனும் காலவரையறைக்குள் கடன் அட்டை (கிரடிட் கார்ட்) மீது செலவு செய்யப்பட்ட நியாயம் அல்லது சேவைக் கட்டணம் உள்ளடங்காத பணத்துக்கான உரிமம் கோருதல், கேள்வி அல்லது வேண்டுகோளை அந்த தொகையின் ஒவ்வொரு 1,000 ரூபாவிற்கும் அல்லது அதன் பகுதிக்கு | 10.00 |
| 6. | கம்பனியொன்றின் ஏதேனும் பங்குச் சான்றிதழ் விநியோகம், கைமாற்றம், சாட்டுதல் தொடர்பாக வெளியிடப்பட்ட ஏதேனும் பங்குச் சான்றிதழுக்கு ஒவ்வொரு 1,000 ரூபாவிற்கு அல்லது அதன் பகுதிக்கு | 5.00 |
| 7. | ஏதேனும் திட்டவட்டமானதும் நிச்சயமானதும் ஏதேனும் ஆதனத்தைப் பாதிப்பது மான பணத்தொகைக்கான முறியொன்று அல்லது ஈடொன்று– ஒவ்வொரு 1000 ரூபாவிற்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு | 1.00 |
| 8. | பண வாக்குறுதிப் பத்திரமொன்று– ஒவ்வொரு 1000 ரூபா அல்லது அதன் ஒரு பகுதிக்கு | 1.00 |
| 9. | ஏதேனும் ஆதனத்தை குத்தகை அல்லது வாடகைக்கு விடுதல் – | |
| | (அ) வாடகை அல்லது குத்தகை ஒப்பந்தத்தில் (தவணைக் கொள்வனவு உடன்படிக்கை தவிர்ந்த) காட்டப்பட்டுள்ள ஏதேனும் தவணைக் கொடுப்பனவுகள் உள்ளடங்கலாக முழுமையான காலப்பகுதிக்காக செலுத்த வேண்டிய வாடகை உட்பட முழுமையான வாடகை அல்லது குத்தகையில் ஒவ்வொரு 1000 ரூபா அல்லது அதன் ஒரு பகுதிக்கு | 10.00 |
| | வாடகை அல்லது குத்தகைக் காலம் இருபது வருடங்களைக் கொண்ட காலத்தை விஞ்சும்போது வாடகையில் முழுக் காலத்திற்கும் செலுத்த வேண்டிய சராசரி வாடகை அல்லது குத்தகை அத்தகைய காலத்தின் முதல் இருபது வருடங்களுக்கானதாகக் கொள்ளப்படும். | |
| | (ஆ) 1982 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க நுகர்வோர் கடன் சட்டத்தின் கீழ் செய்துகொள்ளப்பட்ட தவணைக் கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் குறிப்பிட்ட ஒவ்வொரு 1,000 ரூபா அல்லது அதன் ஒரு பகுதிக்கு | 10.00 |
| 10. | ஏதேனும் பற்றுச்சீட்டு அல்லது விடுவிப்புப் பணம் அல்லது ஆதனத்திற்காக வழங்கப்பட்டது. | |
| | (அ) ரூபா 1,000 அல்லது அதற்கு மேற்பட்டதாகவும் ஆனால் ரூபா 50,000 இனை விடக் குறைவானதும் (பந்தி (ஆ) வில் குறிப்பிட்ட சம்பளங்கள் தவிர்ந்த) | |
| | – ஒவ்வொரு 1,000 ரூபா அல்லது அதன் ஒரு பகுதிக்கு | 1.00 |
| | – ரூபா 50,000 அல்லது அதற்கு மேல் | 50.00 |
| | (ஆ) 25,000 ரூபாவிற்கும் அதிகமான ஆனால் 40,000 ரூபாவிற்குக் குறைந்த மொத்த உழைப்பூதியத்தைச் செலுத்துவதற்காக வழங்கப்பட்டது | 25.00 |
| | ரூபா 40,000 அல்லது அதற்கு மேற்பட்ட ஆனால் 50,000 ரூபாவை விடக் குறைந்தது | 40.00 |
| | ரூபா 50,000 அல்லது அதற்கு மேற்பட்டது | 50.00 |

10–488

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.